ஶ்ரீ:

ஶ்ரீ [illegible] ணாய நம:

ஶ்ரீஸத்குருசரணாரவிந்தாப்யாம் நம:

ஜயம்தி

ஶ்ரீ பாரத்வாஜவம்ஶமுக்தாமணீநாம்

ஸகலவித்யாபாராவாரபாரீணாநாம்

ஶ்ரீமதப்பய்யதீக்ஷிதேந்த்ராணாம்

ஸோதர்யவம்ஶ்யை:

ஶ்ரீநீலகண்டதீக்ஷிதவர்யை:

விரசிதாஸு க்ருதிஷ்வந்யதம:

ஶாந்திவிலாஸ:

பஶாஸ்த்ரஸாராஹிதேந

ந. ராமநாதஶாஸ்த்ரிணா ஸாஹாய்ய

ஸ்வகீயேந த்ரவ்யேந வாதேந ஸநாதீக்ருத்ய

சென்னபட்டணஸ்த ஶ்ரீவிலாஸ ராஜநாத

ஶ்ரீ ஸரஸ்வதீமஹாமுத்ராக்ஷரஶாலாயாம்

முத்ராபிதோ விஜயதேதராம்.

1907.

𑌭𑍂𑌮𑌿𑌕𑌾.

𑌕𑍃𑌪𑌾𑌪𑍂𑌰𑌾𑌃! [illegible]! [illegible]।

𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 [illegible] 𑌯𑌦𑌤𑍍𑌰 [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] 𑌕𑍃𑌷𑍍𑌣𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌵𑌰𑍍𑌯𑌾𑌃 𑌕𑌰𑍁𑌣𑌾𑌵𑌿𑌷𑍍𑌟𑌹𑍃𑌦𑌯𑌾𑌃
[illegible] 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑌨𑌾𑌯𑌾𑌸𑍇𑌨 𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌰𑍍𑌗𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶-
𑌕𑌂 [illegible]
[illegible] 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌜𑌾𑌤𑌮𑍍। [illegible]
𑌨𑍍𑌯𑌤𑌮𑍋𑌽𑌯𑌂 “𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌵𑌿𑌲𑌾𑌸𑌾𑌖𑍍𑌯𑍋” 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌃। [illegible]
𑌜𑍍𑌞𑌾𑌯𑌤𑍇 𑌯𑌦𑌤𑍍𑌰 [illegible]
[illegible] 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑍇𑌵 𑌪𑍍𑌰𑌾𑌧𑌾𑌨𑍍𑌯𑍇𑌨 𑌵𑌰𑍍𑌣𑍍𑌯-
𑌤𑍇 [illegible] 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 [illegible]
𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿। [illegible] 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌃 [illegible]
[illegible]
𑌇𑌤𑌿 [illegible]
[illegible]
[illegible]
[illegible] 𑌸𑌹𑍃𑌦𑌯𑌾𑌨𑌾-
𑌮𑌿𑌤𑌿 [illegible]। 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 [illegible]
[illegible] 𑌜𑍍𑌞𑌾𑌨𑌹𑍀𑌨𑌤𑌯𑌾 [illegible]
𑌯𑌦𑌿 [illegible]
[illegible] 𑌦𑌯𑌾𑌲𑌵𑌃 𑌸𑌜𑍍𑌜𑌨𑌾 𑌇𑌤𑌿 [illegible] 𑌇𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌮𑍍।

𑌇𑌤𑌿 𑌸𑌹𑍃𑌦𑌯 [illegible],

𑌨𑌾. [illegible].

முகவுரை.

ஆரியர்களே! ஆஸ்திகசிரோமணிகளே!

இங்கு சற்று கவனியுங்கள்.

இக்கொடிய கலிகாலமானது உலகமெங்கும் பரவி தனது மகிமையால் வெகுவேறுபாடுகளை செய்துவிட்டதென்பது யாவருக்குந் தெரிந்தவிஷயமே. இப்படியிருக்க ஸ்ரீபாரத்துவாஜகுலத்திற்கு மணிபோல் விளங்குகின்ற அத்துவைதவித்தைக்கு ஆசிரியர்களான ஸ்ரீமத் அப்பய்யதீக்ஷிதரவர்களின் தம்பி பேரனாக அவதரித்து எல்லா சாஸ்திரங்களின் உண்மையை நன்றாய் உணர்ந்த ஸ்ரீ நீலகண்டதீக்ஷிதரவர்கள் கருணைகூர்ந்து எல்லாருக்கும் பக்திமார்க்கத்தை நன்றாய் விளக்கக்கூடியவைகளாயும் கேட்குதல் படித்தல் முதலியவைகளால் எல்லாபாவங்களையும் போக்கடிக்ககூடியவைகளாயும் அஞ்ஞானத்தை விலக்கி நல்லஞானத்தையுண்டாக்கி நமது நன்மையை வெகுவாய் உண்டுபண்ணக்கூடியவைகளாயுமுள்ள அநேகம் ஸத்கிரந்தங்களையியற்றினார்கள். அவைகளில் "சாந்திவிலாஸம்" என்கிற இந்த கிரந்தம் காமம் முதலியவைகளை யடக்குவதால் உண்டாகிற சாந்தி என்பதையும் அதற்கு காரணமான ஸர்வேச்வரனுடைய பாதகமலங்களில் பக்தி என்பதையும் விசேஷமாய் வெளிப்படுத்துகின்றதென்பது இதன் பெயராலேயே நன்றாய் விளங்கும். மேலும் இது உலகத்தில் அதிகமாய் பரவாததால் எல்லோருக்கும் உபயோகப்படும்படி இதை பிரசுரிக்கவேண்டுமென்று நினைத்து ஒரு எளியதமிழ் மொழிபெயர்ப்புடன் சேர்த்து பிரசுரிக்க அதிகமாய் முயன்றேன். இப்போது நீலகண்டருடைய கிருபையால் பிரசுரித்து வெளிவந்திருக்கிற இப்புஸ்தகமானது எல்லோருக்கும் மனதில் அளவற்ற சந்தோஷத்தையுண்டாக்குமென்று நம்புகிறேன். ஆகிலும் இதை மொழிபெயர்க்கும்போதும் பரிசோதிக்கும்போதும் அஜாக்கிரதையினாலோ அல்லது அறிவற்றமையாலோ இடையிடையிலே ஏதோவது பிசகுகள் நேர்ந்திருந்தாலும் அவைகளை மன்னித்து நல்ல மனமுடைய பெரியோர்கள் தயவுடன் என்னை ஆசிர்வதிக்கும்படி பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,

பெலாகூர்—நா. ராமநாதசாஸ்திரி.



ஸ்ரீ:

ஸ்ரீமஹாகணபதயே நம:

ஸ்ரீநீலகண்டதீக்ஷிதவிரசித:

ஸாந்திவிலாஸ:

ப்ராரப்யதே.

ஸந்த்யேவாத்ர துராஹாய க்ஷுத்ரகீடா நகயோர்தே |
கிம் தம்வ த்ர்வி த்ரிப்ரயோஜனதாவெராதம் வதீதி ||
ஸம்ஸேகஸ்நிஜநிஷிக்யோ ஸா துதார ஸீஷம்
கத்ருஸ்ருளஷம் தத்விகதியாதத்வல ஹ்ருகதிஹ்ய: |
கிம் நாஶ்ரா க்ஷாவ்யஸ நரவிவாகிம் ஸாவம் நாநுஹவ
ந்நாவாரம்ஸீத்தத்விஹ்ருதயங்கீதந்யஸோ ரவிவாக: || ௧ ||

ஸ்ரீமான் நீலகண்ட தீக்ஷிதரவர்கள் நமக்கு இவ்வுலகமே உண்மையென்ற அஞ்ஞானம் நீங்கி ஸர்வலோகசரண்யரான ஈச்வரருடைய பாதகமலங்களில் ஒருக்காலும் விலகாத பக்தியுண்டாவதுடன் அதற்கு சாதகமானகார்யங்களையே நாம் எப்போதும் செய்துவரவேண்டுமென்றும் அதினுலேதான் ஜன்னமரண ரூபமாகிய இந்த ஸம்ஸாரத்தை நிச்சயமாய் நாம் தாண்டக்கூடுமென்பதையும் தயவுடன் நமக்கு உபதேசிக்கின்றார்.

(1) நான் எந்த குலத்தில் பிறந்தேன் எவர்களுக்கு பிள்ளையானேன் ஆகிலும் எவ்வளவு பெரியோர்களிடமிருந்து எவ்வளவு விதமாய் எவ்வளவு உண்மைகளை கேட்டேன். துக்கத்தையும் பார்க்கவில்லையா சுகத்தையும் அனுபவிக்கவில்லையா ஆகிலும் மனமானது ஒழிவையடையவில்லையே என்பரிபாகம் எவ்விதமானது

அதாவது வெகுசாஸ்திரங்களின் உண்மையையறிந்து ஈச்வரபக்தியைவிடாமல் செய்து வந்த நல்ல மனமுடைய பெரியோர்களின் குலத்தில் வெகுசாந்தர்களான ஸ்திரீ புருஷர்களுக்கு பிள்ளையாய் பிறந்து அவர்களிடமிருந்தும் இன்னும் மற்றுமுள்ள பெரியோர்களிடமிருந்தும் அநேகம் உண்மையான விஷயங்களை தெரிந்து கொண்டும் இடையிடையிலே சுகதுக்கங்களை வெகுவாய் அனுபவித்தும் எனது மனம் ஒழிவையடையாவிட்டால் எனது பரிபாகம் எவ்விதமானதென்று நமக்கு ஆசிரியரான இக்கவியே சொல்லுகின்றாரென்பது கருத்து

[illegible]

(2) ஈச்வரன் நமக்கு கை கால் முதலிய கருவிகளை நன்றாய் கொடுத்திருந்தாலும் நாம் அவைகளை சரியான மார்க்கத்தில் உபயோகிப்பதில்லை என்பது இங்கு சொல்லப்படுகின்றது.

எனது கால்கள் வெகு நெருக்கமான இடங்களுக்குப்போவதிலேயே மிகவும் சாமர்த்தியமுள்ளவைகள். நன்றாய்த் தெரிந்துகொண்டு பொய்யான வார்த்தைகளையே பேசுவதில் வாய் உபயோகப்படுகிறது. புத்தியோ பிறரின் தோஷங்களையே கவனிக்கின்றது. ஆனால் எனக்கு நன்மையான காரியங்களில் நொண்டியாகவும் ஊமையாகவும் பசுவாகவுமாய்விடுகிறேன். அதாவது, இவ்விதமாய் மனம் முதலியவைகளை உபயோகிக்காமல் கால்களை தேவாலயம் முதலான விடங்களுக்கு போகும்படியும் வாக்கை ஈச்வர நாமங்களை யுச்சரிக்கும்படியும் மனதை ஈச்வரத்யானம் பண்ணும்படியும் செய்வதே இந்த கருவிகளையடைந்ததற்கு முக்கியமான பிரயோஜனம் என்பதும் இவ்விதத்தாலேயே நாம் நன்மையை தேடிக்கொள்ள கூடுமென்பதும் இதன் கருத்து. இது முதலிய சுலோகங்களில் நான் என்று சொல்லுவதற்கு நாம் எல்லோரும் என்று பொருள்.

[illegible]

[illegible]
[illegible] ||

(3) நாமே நமது நன்மைக்கு முயலாவிட்டால் பத்னியும் உபகாரஞ்செய்யமாட்டாள் என்பது இங்கு சொல்லப்படுகின்றது.

எந்த பெண்சாதியை திருப்தி செய்வதற்கு இவ்வுயிரும் செல்வமும் கொஞ்சங்கூட கவனிக்கப்படவில்லையோ, எவள் மனதில் ப்ரீதியையுண்டாக்கினல் அது மோட்சத்தைக்காட்டிலும் மேலானதோ அதே பத்னீ கிழவனையும் பணமற்றவனையுமிருக்கும் என்னை பந்துக்கு சரியாய்க் கூட நினைக்கவில்லையே. ஹேபரமசிவனே நான் என்ன செய்வேன். அதாவது பத்னீ தாம் நல்ல நிலைமையில் இருக்கும்போது தான் நம்மிடத்தில் பிரியமுள்ளவளே தவிர நமது கிழத்தனத்திலும் ஏழ்மைத்தனத்திலும் கொஞ்சமேனும் ஆதரிக்கமாட்டாள் ஆகையால் தனது நன்மையை பால்யம் முதல் நாமே தேடிக்கொள்ளவேண்டுமென்பது கருத்து.

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] |ச|

(4) பிள்ளைகளும் உபயோகப்படாவென்று சொல்லுகிறார். அநேகவிதமான பாவங்களைச்செய்து எவர்களை பால்யத்தில் போஷித்தேனே. தூக்கம் ஆகாரம் முதலியவைகளை விட்டாவது எவர்களுக்கு கல்விகற்பித்தேனே. அந்த பிள்ளைகளே இப்போது தானேயுண்டாகியவர்போலும் ஜன்மாந்திரத்திலுண்டான அதிர்ஷ்டத்தினல் நல்ல ஞானமுடையவர்போலும் தங்களையே மறந்து விடுகிறார்கள். அதாவது, நமது சிரமத்தையுணராமல் நம்மிடத்தில் நன்றியற்றவர்களாய் அந்திய காலத்தில் நம்மையே அவமதிக்கிறார்கள் என்பது கருத்து.

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ||

* [illegible]

(5) பத்னி, பிள்ளைகள் மிகவும் சிநேகிதர்கள் உறவினர் வேலைக்காரர் முதலிய அனைவரும் நம் கனவிலுங்கூட என்னுடைய பிரியவசிக்காயமேல்யிருந்தார்கள் இப்போது யமனின் உத்திரவினால் அநேகம் தூதர்கள் எனது சமீபம் வந்து விட்டால் அவர்களில் ஒருவன் கூட என்னையனுசரிக்க விரும்பவில்லையே, எசிவனே (நான் என்ன செய்வேன்). அதாவது பெண்சாதி பிள்ளைகள் முதலியவர்கள் நமது நல்ல நிலைமையிலேயே சிநேகிதர்களே தவிர வேறு காலங்களில் நம்மைவெறுப்பார்கள் என்பது கருத்து. இங்கு (ஸாஹஸ) என்னும் பதத்தால் காமனை ஸம்ஹாரஞ்செய்த நீரே என்னுடைய போகாதிகளை நீக்கி நல்ல கதியை கொடுத்து காப்பாற்றவேண்டு மென்ற அர்த்தம் தோன்றுகிறது.

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

(6) இந்த உலகவாழ்க்கையைத்தானே நாம் மிகவும் மேலாக நினைக்கிறோமென்று இங்கு சொல்லப்படுகின்றது. அரசனுடைய வேலைக்காரர்கள் என்னைப்போன்றவர்களிடம் சிநேகமுடையவர்களாயிருந்தால் இதுவே ஸகலசாஸ்திரங்களையும் உபதேசம் செய்யக்கூடிய உபாத்தியாயருடைய லாபமாகவும் அரசன் வீட்டில் பிரவேசிக்கத்தக்க பெருந்தன்மையை அடைவதே நைமிசாரண்ணியத்திற்கு போனதாகவும் அரசனை நேரில் பார்ப்பதே பரப்பிரும்மத்தைப்பார்த்ததாகவும் அரசன் வீட்டில் தேகத்தை விட்டு விடுவதுமே மோட்சமாகவுமாகிவிடுகிறது. அதாவது நாம் இவ்விதமானவைகளிலேயே மிகவும் சந்தோஷப்படுகிறோமே தவிர நமது நன்மைக்கு காரணமான பிரும்மவிசாரம் முதலியவைகளை செய்வதில்லை என்பது கருத்து. இந்தசுலோகத்தில் ஒவ்வொருபாதத்திலும் உபயோகிக்கப்பட்ட (ராஜ) என்னும் பதத்திற்கு அரசன்முதலிய பெரிய பிறப்புக்கள் என்றும் அர்த்தம் உண்டு.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(7) புண்ணிய தீர்த்தங்களுக்குப் போவதும் தேவதைகளை பூஜிப்பதும் யாகங்கள் செய்யவேண்டுமென்றும் குளம் முதலியவைகளை வெட்டவேண்டுமென்றும் மிகவும் ஆவலடைவதும் சாஸ்திரங்களில் கெட்டிகாரத்தன்மையும் இன்னும் மற்றுமுள்ள எல்லாநற்காரியங்களும்என்னைப்போன்றவர்களுக்கு பணத்தை சம்பாதிப்பதற்கே உதவுகின்றன. அந்த பணங்களும் பூமியையாவது அல்லது அரசர்களையாவது அடைந்துவிடுகின்றன. அதாவது, புண்ணிய தீர்த்தயாத்திரை முதலிய நற்காரியங்களைச்செய்து ஈசுவரர்க்கு அர்ப்பணம் (வணக்கத்தோடு ஒப்புவித்தல்) செய்யாமல் அவைகளைக்கொண்டே பணம் சம்பாதிக்க எத்தனிக்கின்றோம் அந்த பணமும் நமக்கு கடைசிகாலத்தில் உதவுகிறதில்லை. இதை தெரிந்துகொள்ளாமல் நாம் நற்காரியங்களைக்கொண்டு பணம் சம்பாதிக்கவேண்டுமென்றே முயலுவது புத்திஹீனம் என்பது கருத்து.

ஆகண்டாந்தமவாப்ய ... ஶுஶ்ரூஷயா ப்ராப்தவித்யா
ஶாஸ்த்ராஶாஸ்த்ரஸஹஸ்ரஸம்ஹதி ... தாகண்ட ... ।
நித்ராஹேதுதயா ந்ருபேஷு ... தாம்வார்தாம்
காலக்ஷேபணமாக ... கஷ்டம் ... ॥அ॥

(8) பால்யம் முதல் உபாத்தியாயர்களுக்கு வேலைசெய்து, வெகு ஆவலுடன் பிரும்மவித்தைகளில் எந்த சாமர்த்தியம் சம்பாதிக்கப்பட்டதோ. கஷ்டம் இதுகூட இரவுகளில் தூக்கம் வருவதற்காக கதைகளைகேட்கிற அரசர்களுக்கு போதுபோக்குவதற்கு உபயோகப்படுகிறதாய் ஆகிவிட்டதே இதென்னகஷ்டம். அதாவது வெகுசிரமத்துடன்படித்த பிரும்மவித்தையை விசாரம் செய்து தன் சொந்த பிரயோஜனத்திற்கு உபயோகப்படுத்தாமல் பணத்தின் ஆசையால், அரசர்களுக்கு இரவில் தூக்கம் வருதற்கு அநேகம் கதைகளை சொல்லும்போது பலவாறாய் இதை உபயோகித்து வீணாய் கெட்டுப்போவது மிகவும் கஷ்டம் என்பது கருத்து. மேலும் (கஷ்டம்—ஹந்த) என்னும் இரண்டுபதங்களுக்கும் கஷ்டமென்றே அர்த்தமாதலால் இவ்விதம் பிரும்மவித்தையின் உபயோகத்தை நினைத்தால் மிகவும் வருத்தமுண்டாகிறதென்றும் கருத்து.

ஜாயாதேயாவஸந்தஸந்தாவாஹ ... காவா
... ॥

[illegible]
[illegible] ‖ ௯‖

(9) நமது நன்மைக்குநாம் கொஞ்சங்கூடமுயலுவதேயில்லை என்று இங்குசொல்லுகிறார். எமமார்க்கத்தில் நிழல்ஜலம் வஸ்திரம் போஜனம் வாகனம் தீபம்முதலியவைகளில் சிறிதாவது மனிதர்களால் விலைகொடுத்து வாங்குவதற்குகூடமுடியாதோ அப்படிப்பட்ட தூரமான வழியில் அவசியம் போகவேண்டியிருப்பதால் வயிறுவளர்க்கிற நாம் அதற்கு யோக்கியமான ஒரு காரியத்தையும் நினைப்பதேயில்லை. அதாவது, யமமார்க்கத்தில் நிச்சயமாய் போகவேண்டியிருப்பதால் அங்கே நிழல் முதலியவைகள் இல்லாததால் மிகவும் சிரமத்தையடையப்போகிற நாம் இவ்வுலகிலேயே நல்ல ஜலங்கள் முதலிய தானங்களைச்செய்தால் அந்த வழியில் வெகுசுகத்தையடையலாமென்று கருத்து.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ‖௧௦‖

(10) சூரியபுத்திரனையமனுடைய கிராமத்தில் பேசும் சப்தங்கள் கேட்கப்படுகின்றன கழுத்தில் வைக்கப்பட்ட எமனுடைய பாசாயுதமும் மெள்ளமெள்ள பிடித்திழுக்கின்றது. போவதில் மிகவும் பரபரப்புள்ள பிராணவாயுக்களும் உத்திரவு வாங்கிக் கொள்ளுகின்றன. இப்போதும் மனதாவது விஷயசுகங்களிலிருந்து ஒழிவையடையவேயில்லை. அதாவது, இப்படிப்பட்ட ஆபத்து காலத்திலாவது மனம் விஷயங்களிலிருந்து ஒழிவையடைந்து ஈச்வரபக்தி செய்யவேண்டும் என்பது கருத்து.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ‖௧௧‖

(11) கண்கள் குருடாகும்போதும் பற்களாடும்போதும் மீசை நிறைக்கும்போதும் அவயவங்கள் கஷ்டப்படும்போதும் மனங் கலங்கியிருக்கும்போதும் ஜீனக்கைநடுக்கும்போதும் எமனுடைய

துரர்களான இவைகளால் அடிக்கடி ஞாபகப்படுத்தப்படுகிற நாம் உடம்பைக்காப்பாற்றுவதற்கு வைத்தியர்களுக்கே நல்லவார்த்தைகளைச்சொல்லுகின்றோம். அதாவது இந்தமாதிரியான முற்கூறிய அவஸ்தைகளெல்லாம் இந்த தேகஸ்திரமல்லவென்று நமக்கு அடிக்கடி தெரிவித்தும் தேகத்திலேயே அபிமானத்தால் வைத்தியர்களை வணங்குகின்றோமே தவிர ஈச்வரனை நினைப்பதேயில்லை என்பது கருத்து.

பாபேஹாவஹ்நிஜ்வாலவிச்ரேவஸாந்தி காமகாலோ தஷ்டா
யாவாயா வாஜிவிஜிபிவிபெரெிஸ்ரி யாஷ்வா ஸிவெதாஃ।
ஸ்வம் தெவாதீவாரஸமா தெஷெஜெவெஸிவஹஷ்டு
வெ தெெஸ்ரீஸாபவாமஸாதெ தகிஷ்கவெமாஷ்ஷ்யாசி॥கஉ॥

(12) பாவமைப்போன்ற வயற்றிலுள்ள நெருப்பானது அணைந்துவிட்டது, காமபோகமென்ற சொல்லுகூட உயிரைவிழுங்கிவிட்டது, குதிரைபோன்ற இந்திரியங்கள் திக்குகள்தோறும் ஓடியோடியலைந்து வரிசையாய்விழுந்து விட்டன. இவ்விதம் என்னுடைய சத்துருக்கூட்டமானது தெய்வபலத்தால் ஒழிவடைந்தது ஆகிலும் மனமொன்று மாத்திரம் எனக்கு வசப்படவில்லையே, என்ன செய்யவேன், எங்குபோவேன், அதாவது, வயிற்றில் பசியாகிய நெருப்பும் காமபோகங்களையனுபவிப்பதில் ஆசையும் குதிரையினுடைய வேகத்தைக்காட்டிலும் அதிகவேகமுடைய இந்திரியக்கூட்டமும் இந்த ஜீவனுடைய நற்கதிக்கு இடையூறைச் செய்கிற சத்துருக்களாயிருந்தாலும் அவைகள்கூட தேகத்தின் முடிவுகாலத்திற்குச்சற்று முன்னுதாகவே ஒழிந்துவிடுகின்றன. அக்காலத்திலாவது மனதும் வசப்பட்டால் பரமசிவனை ஸ்மரித்து, பிறவிக்கடலை தாண்டிவிடலாமே. அவ்விதமில்லாததால் நாம் பிறவிமுதலியவினைகளால் வருந்துகிறோமென்பது கருத்து.

நாநோபாயைஶ்சிரதரஞ்ஜாஶஹஷ்வீதிதயஷ்வா
வஸ்ஶூவாஜிதிஷிஹஷ்ஸண்ஹஶெகம்ஸாவெ।
ஸ்ரூசவாஸ்ரூசவாபஹஜநவாதாயஷெதாவதாவி
ஷ்ராஷ்ணாஜுஷவயிதிஷிநவஞாஸஜ்ஞாநகெஷ॥கங॥

(13) அநேகவித உபாயங்களால் திக்குகள்தோறும் சென்று பணங்களை சம்பாதித்தார் அவைகளை செலவழித்தும் நமது தேகத்

தில் பெருத்திருக்கும் தன்மையொன்றுதான் நன்றாய்த் தேடிக்கொள்ளப்பட்டது தவிர, இவ்வளவு வயது பூமியிலிருக்கும் அநேக ஜனங்களிடமிருந்து பலமுறைகேட்டும் அமாவாசியையை முடிவாகவுடையராத்திரி காலங்களிலுள்ள இருட்டுபோல் பலமான அஞ்ஞானம் ஒன்றுதான் நம்மால் அடையப்பட்டது. அதாவது பலமாதிரியான உபாயங்களை செய்து சேர்க்கும் பணத்தை நமது தேக சௌக்கியத்திற்கேற்ற கெட்டவிஷயங்களிற் செலவிடுகிறோமே யல்லாது பெரியோர்களால் இந்த தேகம் நிலையல்ல தர்மமேபெரிதென்று பலவாறு சொல்லக்கேட்டும் பெருத்த நமது அஞ்ஞானமே தர்மத்தை செய்யவிட்டாமல் கெடுத்து விடுகிறதென்பது கருத்து.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ ௧௪ ॥

(14) எங்கேயாவது தூரிடத்தில் மறைந்து படுத்திருக்கும் என்னை கையில் தண்டத்தையுடைய எமனுடைய வேலைக்காரர்கள் எப்படி பார்க்கப்போகிறார்கள். அப்படிப்பார்த்தாலும் கட்டுக்கடங்காத வியாபாரத்தையுடைய என் விஷத்தில் என்ன செய்வார்கள். அல்லது கட்டாயப்படுத்தி எதாவது கொஞ்சம் தொந்திரவு செய்தாலும் அரசனிடம் சொல்லி அவர்களை கொல்லும்படி செய்துவிடுகிறேன் என்று அதிகமான தைரியத்தை மனதில் வைத்துக்கொண்டு எமனை நான் நினைக்கவில்லை. அதாவது சில மூடர்கள் இவ்வுலகில் பொய்யைச்சொல்லி கெட்டகாரியத்தினுண்டாகும் குற்றங்களிலிருந்து தப்பித்துகொள்ளுவதுபோல் எமனுடைய தண்டனைக்குபயப்படாமல் அவனுடைய தூதர்கள் வந்தாலும் ஒளிந்துகொள்ளுகிறேன். அப்படி அவர்கள் கண்டுபிடித்தாலும் என்னை என்ன செய்வார்கள் என்பது முதலானகெட்ட தைரியத்துடன் கடவுளை நினையாமல் கெட்டுப்போகிறோமென்பது கருத்து.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

(15) சில அறிவற்றவர்களின் நிலைமையை இங்கு சொல்லுகிருர்.

வேதங்களாவது பொய்யைசொல்லுவதாகவிருக்கட்டும். நியாயம் இது அநியாயம் இது என்கிற மரியாதையின் ஏற்பாட்டை கடவுளாவது மரந்துவிடட்டும். எமன் இருக்கிருன் என்பதாவது பொய்யாகட்டும். நானுவது சாவற்றவனுய் ஆகிவிடுகிறேன் என்று அநேகம் சாமாதானங்களை யூகித்துக்கொண்டு தேகத்தில் ஊந்தண்ணியென்ற கெட்டஎீரின் வலுவினல் மனதில் சந்தோஷத்தை யடைந்துகொண்டு எல்லா நற்காரியங்களிலுமிருந்து நழுவை யடைந்து விடுகிறோம். அதாவது சிலர் தேகத்தின் கொழுப்பினல் வேதம் சொல்லுவது பொய்யாகிவிட்டுமென்பது முதலானகெட்ட எண்ணத்துடன் மறுவுலகத்தில் பயமற்று ஈச்வரரிடத்திலும் பக்தி செய்யாமல் அதர்மத்திலேயே மூழ்கிப்போகிருர்கள் என்பது கருத்து.

யாஶேயாஶ்ச ஹ்ருதிவர்ஷஃஸ்யாஸகேலஸிவாஸ
ஷ்நாவஸ்நாவஸ்ஸ வி வி வஞ்திக்ஷீயதேஷவ்யுஶாயா:।
ஹர்த்ருஹர்த்ருஸ்ரவி வஸர்வ ஸுவெஸுஶ்வ்யதேஷார்ணாஶாமி:
க்ருதேக்ருதே நிஶவயிவார்நவ்யுய்யுதிஷாதகாஸ:॥

(16) ஒவ்வொருயாமும் போய்க்கொண்டிருக்கும்போது சரீரத்தினுடைய பூட்டுமுதலியகட்டுகள் நழுவிவிடுகின்றன. ஒவ்வொருமூச்சும் வெளிப்புறப்படும்போது நீண்ட வாழ்நாளானது குறைந்துகொண்டே வருகிறது. கொஞ்சங் கொஞ்சமான சுகத்தையனுபவிக்க அனுபவிக்க பூர்வபுண்ய கூட்டமானது குறைந்து விடுகிறது. நம்முடைய ஒவ்வொரு செய்கைகளிலேயும் முடிவற்ற பாபமானது வளருகிறது. அதாவது இவ்வுலகம் நிலையற்றதால் உண்மையான உலகம் உண்டென்று எண்ணமில்லாதவர்களுக்கு வீணுய் வாழ்நாள் செல்லுவதுடன் கெட்டகாரியங்களால் பாபமேவிருத்தியாகிற தென்பது கருத்து.

மஙவேஶஷ்யாஸகுஷர்வஷ்நஸாவாதஹஶி:
மகூாஷ்ரமூஃத்ரீஹர்வஜநாயஃஷூஙஃக்ருதாஙஃ।
ஷ்ரஷ்டாமுஹ்யாநிரயஜஙிதாயாதநாஶகஷோ
விஷ்ரதேஷ்ஷாநிவிழுஶவி தாவ்யயுஶாயாதயுயாஶ:॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(17) எல்லாதுக்கக்கூட்டங்களுக்கும் இருப்பிடமான ஒரு வழியானது நிச்சயமாய் நடக்கிறதிரவேண்டும் போயும் மூன்றுலகிலுள்ள ஜனங்களுடைய வாழ்நாள்களின் முடிவை செய்கிற எமன் நிச்சயமாய் பார்க்கத்தக்கவன். அவனையும் பார்த்தபிறகு நகரத்திலுண்டான அநேக விதமான துக்கங்கள் அவர்யும் அடையத்தக்கனதுகள் ஆனால் இவைகளெல்லாவற்றையும் மறந்துவிட்டு வீணாய் காலத்தை போக்கிவிடுகிறோம். அதாவது, ஆயுளை வீணாய் கழிக்காமலும் மேற்கூறிய வருத்தங்களையடையாமலும் இச்சரீரம் இருக்கும்போதே நன்மையை தேடிக்கொள்ளவேண்டுமென்பது கருத்து.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(18) ஒவ்வொரு காலங்களிலேயும் கிடைத்த சாப்பிடக்கூடியபதார்த்தங்களின் கூட்டங்களை சாப்பிடவில்லையா, ஜலத்தையும் குடிக்கவில்லையா, இரவுகளில் படுத்து தூங்கவில்லையா, தங்கள் குழந்தைகளையும் காப்பாற்றவில்லையா, ஸ்திரிகளிடத்தில் சுகத்தையநுபவிக்கவில்லையா. ஆகையால் கெட்டகாரியம் நற்காரியமென்று பகுத்தறிவற்றவர்களுக்கும் மிருகங்களுக்கும் என்ன வித்தியாசம். அதாவது மிருகங்களும் பசிக்கும்போது பதார்த்தங்களை தின்று ஜலத்தையும் குடித்து இரவுகளில் படுத்துக்கொண்டு ஸ்திரிகளுடன் சுகத்தையும் அநுபவிக்கின்றன. மனிதர்களுமிவ்வாறே. ஆனால் மிருகங்களுக்கு கெட்டகாரியம் நற்காரியமென்ற பகுத்தறிவு கிடையாது. மனிதர்களுக்கு அந்த அறிவு உண்டு. ஆகையால் அவர்கள் தங்கள் புத்தியால் ஆலோசித்து கெட்ட காரியங்களை விலக்கி தங்கள் நன்மைக்கு உதவுகின்ற நற்காரியங்களைச் செய்யக்கூடும். இப்படிப்பட்ட அறிவில்லாதவர்கள் பசுக்களுக்கு சமானர்களென்பது கருத்து.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(19) வெகு சிரமத்துடன் அடையப்பட்ட பணத்தையும் நாற்றாக்கு ஒன்றைக்காட்டிலும் அதிக வட்டியையடைவதில் ஆசையால் கடுதாசில் எழுதிய எத்தனை ஒன்றை வாங்கிக்கொண்டு எல்லாவற்றையும் விட்டு விடுகிறோம். வேறு உலகத்தில் அநேகம் மடங்கு அதிகலாபம் கிடைக்குமென்று சாஸ்திரங்களால் ஏற்பட்டிருக்கும்போது வீணசந்தேகங்களால் கலங்கிய மனமுடைய நாமு கொஞ்சம் பணத்தைக்கூட நன்றாய் செலவழிப்பதில்லை. அதாவது பணத்தை சிரமப்பட்டு சம்பாதித்து அதிக வட்டிக்குக்கொடுக்க வேண்டுமென்ற ஆசையால் பத்திரங்களை எழுதிவாங்கிக்கொண்டு எல்லாவற்றையும் கொடுத்து விடுகிறோம் பிறகு அதிக வட்டிக்கு ஆசையுடன் கொடுத்தபணம் கொஞ்சங்கூட வேறு உலகத்தில் உதவுகிறதில்லை. ஆனால் தர்மங்களில் செலவழித்தால் மறுஉலகில் வெகுவாய் விருத்தியடையுமென்று பலவாறாய் முறையிடும் சாஸ்திரங்களை நம்பாமல் கொஞ்சங்கூட தர்மங்களில் செலவழித்து சுகத்தையடைகிறதுமில்லை என்பது கருத்து.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ।20।

(20) இந்த தேகமானது கிழத்தனத்தையடைந்து விட்டாலும் ரோகங்களையடைந்தாலும் இந்திரியங்களின் திறமையையிழந்தாலும் சத்துருக்களால் பிடிக்கப்பட்டாலும் என்ன பிரயோஜன மேற்படும் சுகத்தை கொடுக்கக்கூடிய காமப்பிரவேசந்தான் என்ன. இதெல்லாம் வேண்டாம். தன் ஆயுளுக்குத்தான் நிச்சயமென்ன என்று இப்படி அநேகவிதமாய் நிச்சயித்துக்கொண்டு சந்தேகம் இல்லாத ஜனங்களால் பாவங்களின் கூட்டமானது சேர்க்கப்படுகின்றது. அதாவது சில ஜனங்கள் தேகத்திற்கு ரோகம் வந்து விட்டாலும் கண் காது முதலிய இந்திரியங்களின் சாமர்த்தியம் குறைந்தாலும் கிழத்தனம் வந்து விட்டாலும் எவ்விதம் சுகத்தையடைய முடியும் ஆயுள் நிறைந்திருக்கிறதென்பது எப்படி நம்பக்கூடும் ஆகையால் சரீரம் பலமுள்ளதாயிருக்கும்போதே எல்லா சுகத்தையும் அனுபவித்துவிடவேண்டும் என்று நிச்சமாய் நினைத்து பாவத்தையே பலவாறாய் தேடிக்கொள்ளுகிறார்களே தவிர தேகம் நன்றாய் இருக்கும்

போதே நர்மத்தை செய்து சுகத்தையடையவேண்டுமென்று நினைப்பதில்லையென்பது கருத்து.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(21) இந்த பிள்ளைகள் கடன் கொடுத்தவர்கள்போல் எதிரில் வருகின்றார்கள். இப்போது பெண்சாதியும் படுக்கையில் இருக்கும் பாம்புகள்போல் விளக்குகின்றாள் எனது வீடும் இப்போது சிறைச்சாலைக்கு ஒப்பாகவே காணப்படுகிறது அவ்விடத்தில் ஒருக்ஷணம் அரைக்ஷணங்கூட இருப்பதற்கு மனது விரும்பவில்லை ஆதாவது உலகவாழ்க்கையில் மிகவும் வருத்தமடைந்துகொண்டிருக்கும்போது ஏதோ சில பெரியோர்களுக்கு வைராக்கியமுண்டாகும்போது பிள்ளைகள் கடன் கொடுத்தவர்கள்போலும் பத்னீபாம்பைப்போலவும் வீடு சிறைச்சாலையைபோலவும் காணப்படுகின்றன. ஆகையால் அவர்கள் வீட்டிலிருந்துகொண்டு சுகத்தையனுபவிக்க விரும்புகிறதில்லை என்பது கருத்து.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(22) பால்யத்தினாலும் சஞ்சல சித்தமுள்ளவனாயிருப்பதினாலும் வந்தது வந்தது போனது போயிற்று இந்த வீட்டில் ஒருக்ஷணங்கூட இருப்பதற்கு யோக்கியமில்லை, விட்டுவிடுகிறவனுக்கு காலமென்ன என்று அதிகமாய் புத்தியைஸ்திரப்படுத்திக்கொண்டு வீட்டிலிருந்து வெளிக்கிளம்புகிறவர்களாயிருந்தபோதிலும் அழுகிற குழந்தைகளுக்கு நல்ல வார்த்தை சொல்லுவதற்காக உடனே திரும்பி வந்து விடுகிறார்கள். ஆதாவது சிலர்களுக்கு ஜன்மாந்திர புண்ணியங்களால் வைராக்கியமுண்டாகி பால்யத்தினாலும் சஞ்சலமான சித்தத்தினாலும் வந்தது வந்தது போனது போயிற்று இனி இவ்வீட்டில் இருக்கக்கூடாது எங்கேயாவது போகவேண்டும் என்று நிச்சயத்துடன் வீட்டை விட்டு புறப்பட்டாலும் அந்தஸமயத்தில் மாயைமூடிக்கொள்ளுவதால் குழந்தைகள் அழுகின்றனவே

அவைகளை நாமே சாமாதானம் செய்யவேண்டுமென்று மறுபடியும் திரும்பிவந்து இவ்வுலககாரியங்களையே கவனிக்க முயன்றுவிடுகிறார்கள் என்பது கருத்து.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௨௩||

(23) நமக்கு அறிமுகமில்லாமல் சாப்பாட்டுவேளைக்கு நமது வீட்டிற்கு வருகிறவர்களாயும் பெயர் ஊர் முதலியவைகளை நம்மால் விசாரிக்ககூடாதவர்களாயும் ஆனும் பூஜிக்கத்தகுந்தவர்களென்றும், நம்மை தெரிந்துகொண்டு சிநேகத்தால் நமது வீட்டுக்கே வந்த விருந்தாடிகளென்றும் உறவினர்களின் கூட்டங்களென்றும் ஏழைகளென்றும் காப்பாற்றுகிறவர்களை உடைத்தாகாதவர்களென்றும் சிநேகிதர்களென்றும் எவர்களோ அவர்களிடம் தயைசெய்ய வேண்டுமென்று நாங்கள் சொல்லவேயில்லை. ஆனால் எப்போதும் எந்த சரீரத்தை காப்பாற்றவேண்டுமென்று மனதில் நினைக்கின்றாயோ அதே சரீரத்தை இந்த ஜன்மத்தில் போலவே எல்லா ஜன்மங்களிலேயும் நீ காப்பாற்று என்று நன்றாய் சொல்லுகின்றோம் அதாவது நாம் எப்போதும் ஏழைகளையும் அநாதர்களையும் நண்பர்களையும் உறவினர்களையும் இன்னும் மற்றமுள்ள ஜனங்களையுமே காற்றவேண்டும். நாம் சரீரத்தை மாத்திரம் காப்பாற்றினால் போதுமென்று நினைக்கக்கூடாது. அப்படியானால் புண்ணியம் அதிகமாகாமல் மேல்மேலும் சரீரமே வருமேதவிர ஜனனமரணரூபமான சம்சாரத்திலிருந்து ஒருக்காலும் ஒழியவராதென்பது கருத்து.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||

(24) வியாஸர் என்பவர்யார் பிரசித்தரான மனு என்பவர்யார் இந்த யாக்ஞவல்கியர்யார் தகப்பனால் பிள்ளையினிடத்திற்போல் நம்மிடத்தில் எவர்களால் அடிக்கடி நன்மையானது நன்றாய் எடுத்து சொல்லப்பட்டதோ, அகாரணமான தயைக்கு ஸமுத்திரங்களான அவர்களை உலகத்திற்கு உறவினர்களாகவும் பார்க்கின்றோம் நம்மை

முடிவற்ற அஞ்ஞானத்திற்கு பர்வதங்களாகவும் நிந்திக்கப்பட்டவர்களாகவும் பார்க்கின்றோம். அதாவது வியாஸர்பராசர்பாக்யவல்கியர் முதலியவர்கள் வெகு பெரியோர்களாயும் உலகவாழ்க்கையில் நம்பிக்கையற்றவர்களாயும் அளவற்ற பகிமையுடையவர்களாயுமிருந்தாலும் மூடர்களான நாம் நல்லகதியையடையவேண்டுமென்றுதானது நன்மைக்காகவே தகப்பனர் பிள்ளையினிடம் நன்மையையெடுத்துரைப்பதுபோல் அநேகம் தர்மசாஸ்திரம் முதலியவைகளைப்பிரசித்தமாய் இயற்றியிருப்பதால் அளவற்ற அஞ்ஞானமாகிய இருட்டு அடைவதற்கு பர்வதங்களாகிய நாம் அவர்களை உபகந்தார்களின் உபகினர்களாகவே நினைக்கவேண்டுமே தவிர ஒருக்காலும் அவர்களிடத்தில் வெருப்பையடைந்து அவர்களை நிந்திக்கக்கூடாது அப்படி நிந்தித்தால் நமக்கு பாவம் மேலாகும் என்பது கருத்து.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(௨௫) அதிக இருட்டையுடைய நரகக்குழியிலும் சக்ரவாளமென்னும் மலைக்கு வெளியிலும் பாதாளத்திலும் மழைகாலத்து இரவுகளில் பூமியிலும் நெருக்கமான இருட்டென்று எது மிகவும் பிரசித்தமாயிருக்கின்றதோ. அதெல்லாவற்றையும் நினைத்துப்பார்த்தால் நமது மனதிலுள்ள இருட்டிற்கு வேலைக்காரனுயிருப்பதில் கூட யோக்கியமில்லை, அதாவது நரகம் பாதாளம் முதலியவிடங்களில் அதிகமான இருட்டு இருக்கின்றது, அதனால் நமது மனதிலுள்ள இருட்டிற்கு வேலைசெய்வதற்கு கூடமுடியாதென்றால் நமது மனதில் அதிக இருட்டு இருக்கின்றதென்றும் அதற்கே அஞ்ஞானம் என்றும் பெயர் என்பது கருத்து. (சக்ரவாள) என்பது பூமியாகிய உருண்டையின்மேல்முடிக்குப்பெயர் அதற்கே (லோகாலோக) என்னும், பெயர்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(26) எல்லா செ[illegible]ருக்கும் முதல்சாதனமாயும் எல்லா [illegible]ங்களிலும் விட்டுவிடக்கூடியதாயும் இருக்கின்ற தேகத்தில் [illegible] போஷிக்கப்பட[illegible]மென்ற அஞ்ஞானம் ஏற்பட்டால் இ[illegible]ருக்கட்டும் இந்த தேகம்போல் வரப்போகின்றதும் நம்முடை[illegible]ஞானமும் இருக்கட்டும் என்பது தான் தர்மசாஸ்திரங்களில் முக்கியமாய் பிரகடனம் செய்யப்படுகின்றது. அதாவது நாம் அஞ்ஞானத்தால் மிகவும் கெட்டதான இந்த சரீரத்தை மாத்திரம் போஷிக்க நினைத்து வேறு நற்காரியங்களை செய்யாவிட்டால் நமக்கு அடிக்கடி ஜென்மங்கள் வந்துகொண்டேயிருக்கும். அந்த சரீரங்களையே போஷிக்கவேண்டுமே தவிர நல்லகதியை ஒருக்காலும் அடையமுடியாதென்று தர்மசாஸ்திரங்களில் கூறப்படுகின்றதென்பது கருத்து.

காமீ காந்தாவ்யஸநவிவஶ꞉ காமிநீரந்யஸம்ஸ்தா
ஹித்வா ஸ்வாத்மவஶகதப³ஹ்வீ꞉ காமிநீர்நாமலப்⁴யா꞉ ।
லப்³த்⁴வா காந்தாவிஷயஸுக²வத்³தே³ஹமேகாந்தநித்³ரா
வ்யுத்பத்தி꞉ ஸுக²விபத்திரநாஶே ந்ருஷா பராவிவஜ்யு꞉ ॥

(27) காமபீடையினால் வருத்தமடைகிற ஒருகாமியானவன் காமுகஸ்திரிகளையே விட்டுவிட்டு பிறதுபயமில்லாமல் அநேகம் காமுகஸ்திரிகளையனுபவிக்கிறான். இவ்விதம் விஷயசுகங்களையனுபவிப்பதையே முக்கியமாய் உடையமனிதர்களாலேயும் இந்த சரீரத்தில் சில நாளாவது இந்த சுகாநுபவம் விட்டுவிடத்தகுந்தது. அதாவது காமபீடையினால் மிகவும் வருத்தமடைந்தாலும் இவ்வுலகில் ஸ்திரீ சுகத்தை விட்டு ஸ்வர்க்கம் முதலிய புண்ணிய லோகங்களையடையக்கூடிய நற்காரியங்களைச்செய்தால் வேறு உலகத்தில் பயமில்லாமல் அநேக ஸ்திரிகளையடையக்கூடுமாதலால் காமசுகத்தையடைவதே முக்கிய பிரயோஜனமாய் எண்ணியவர்களாயிருந்தாலும் சிறிது நாளாவது இந்த சரீரத்தின் சுகத்தை இவ்வுலகில் அடையாமல் நற்காரியங்களை செய்யமுயலுவது மிகவும் நலம் என்பது கருத்து.

ந்யாய்யாத்³யத்ஸ்வவிக்ரயிகாத்ஸுஹ்ருத³ந்நாத்³யுவத்யா
வைபா⁴தா³த்ஸ்வவிக்ரயிகாவபூ⁴த்³வேஷாம்ஹோஜ்யா꞉ ।
ஸாயுஜ்யே ஹாரதா³விஸ்வத்திக்ஷேயண்யகாஞ்சாவஸம்ஶாஸ꞉
ஸாரோயோநேதிராம்திவிஷயதாவிஸ்பூ²ராயாம்யயுமேஶது꞉ ॥

(28) நியாயத்தினால் வருகிற தனத்தைக்காட்டிலும் கெட்ட வழியிலுள்ள வியாபாரத்தால் அடையப்படுவது எவ்விதம் மேலானது. சாஸ்திரத்தின்படி ஏற்படுத்தப்பட்ட அன்னத்தைக்காட்டிலும் சாஸ்திரங்களால் விலக்கப்பட்ட ஆகாரத்தை சாப்பிடுவது எப்படி மேலானது. பத்னியினிடம் சுகத்தை அனுபவிப்பதைக் காட்டிலும் தாசிகளிடம் என்ன லாபம் கிடைக்கின்றது. அநேகமாய் இல்லை என்று வேதத்திற்கு விஷயமாயிருப்பது உலகத்திலுள்ளவர்களுக்கு ருசியையுண்டாக்குவதில் காரணமாயிருக்கிறது. அதாவது நியாயமான மார்க்கத்தாலே பணம் சம்பாதிக்கவேண்டுமென்றும் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட இடங்களிலேயே சாப்பிடவேண்டுமென்றும் தனது பத்னியினிடமே சௌக்கியத்தையடையவேண்டுமென்றும் வேதங்களிற் கூறுவதை உலகிலுள்ள பெரியோரும் ஆசரிப்பதால் நாமும் அவ்விதமே நடக்கவேண்டுமே தவிர வேறு வித்தியாசமாய் நடக்கக்கூடாதென்பது கருத்து.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ உ௯ ॥

(29) கடவுள் உண்டென்ற எண்ணம் இருந்தால் எல்லா பணத்தையும் பிச்சைக்காரர்களுக்கு அதீனமாய்ச் செய்வது நலம். கடவுள் இல்லை என்ற எண்ணமிருந்தால் அதே பணத்தை மிகவும் சுகபோகத்திற்காக விட்டுவிடுவது நலம். தானும் தொடாமல் பணமானது வெகு அடக்கமாய் வைக்கப்படுகின்றதே இவ்விஷயத்தில் காரணம் என்னவென்று மனக்கலக்கமில்லாமல் யோசிக்கின்றேன் ஆனால் தெரியவில்லை. அதாவது தெய்வபக்தியிருந்தால் பணத்தையெல்லாம் தானங்கள் முதலிய தர்மங்களை செய்து நமது நன்மையை தேடிக்கொள்ளலாம் தெய்வமில்லையென்றால் பணத்தை செலவழித்து இவ்வுலகத்திலேயாவது சுகங்களையடையலாம் இந்த இரண்டு எண்ணமுமில்லாமல் பணத்தை மண்ணிற் புதைத்து வைப்பதின் காரணம் தெரியவில்லை இப்படிச்சொல்லுவதினால் பணத்தை எவ்விதத்திலும் செலவழிக்காமல் புதைத்து வைப்பது புத்தியீனம் என்பது கருத்து.

[illegible]
[illegible] ।

[illegible]
[illegible]

(30) நாய்கள் பெண்ணாய்களின் வால் நுனியில் கோணலாயிருப்பதையும் பன்றிகள் பெண் பன்றிகளின் வயிறு பெருத்திருப்பதையும் குரங்குகள் பெண் குரங்குகளின் பற்களை காட்டுவதையும் கழுதைகள் பெண் கழுதைகளின் கடுமையான கத்துதலின் சத்தத்தையும் மனிதர்கள் ஸ்திரிகளின் மார்பிலுள்ள விக்கம் போன்ற மாம்ச உருண்டையையும் பார்த்து மிகவும் சந்தோஷித்து விளையாடுகிறார்கள். அது அழகா என்ன. அந்த அஞ்ஞானத்தால் வேறாக ஆய்விட்டது. அதாவது நாய்கள் முதலியவைகள் பெண்களிடத்தில் நுனிவால் கோணல் முதலியவைகளைக்கண்டு எவ்விதம் சந்தோஷித்து விளையாடுகின்றனவோ அவ்விதமே மனிதர்களும் ஸ்திரிகளிடத்தில் மார்பிலுள்ள ஸ்தனங்களை கண்டு விளையாடுகிறார்கள். ஆனால் நாய்கள் வால் கோணல் முதலியவைகளை எவ்விதம் அழகுள்ளவைகளாய் நினைக்கின்றனவோ அவ்விதமே மனிதரும் புத்தியீனத்தாலேயே ஸ்திரிகளின் ஸ்தனங்களை அழகுள்ளவைகளாய் நினைக்கிறார்கள் ஆசையால் புத்தியற்ற மனிதர்கள் நாய் முதலியுவைகளுக்கொப்பாவார் என்பது கருத்து.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(31) விளையாட வந்தவன் பத்னியின் முகத்தை பற்களால் கடித்தால் சாப்பிட வந்தவன் சாதம் கொடுப்பவருடைய நுனிக்கையை ஏன் கடிக்கக்கூடாது, இவ்விதம் மன்மதனுடைய மூடர்களை பயித்தியம் பிடித்தவர்களாய் செய்யும் தன்மையானது நன்றாய் தெரிந்திருக்கும்போது ஒருவனும் உடனே விடுவதற்கு சமர்த்தனாயாகிறதில்லை கடைசியில் வெட்கமடைவதற்கு கெட்டிகாரனாயவதில்லை. அதாவது ஒரு ஸ்திரியுடன் சம்பந்திக்கிறவன் அவளது முகத்தை காமவிகாரத்தால கடிக்கிறான் சாப்பிடுகிறவனோ சாதம் கொடுப்பவர்களின் நுனிக்கையைக்கடிக்கிறானா. இல்லேயில்லே, கைகளுக்கும் முகத்திற்கும் பேதமில்லாமலிருந்தாலும் இவனுடைய

அஞ்ஞானத்தால் முகம் அதிக அழகுள்ளதாய் காணப்படுகிறது இவ்வித அஞ்ஞானத்தால் அதிக முட்டாளாய் ஆகிவிடுகிறான் இவ்வித அஞ்ஞானத்தை விட்டு விடவும் நம்மால் கூடவில்லை நாம் கடைசியில் வெட்கத்தையும் அடைகிறதில்லை என்பது கருத்து.

[illegible]
[illegible] ||
[illegible]
[illegible] ||௩௨||

(32) பத்னி பிள்ளைகள் படுக்கை சாப்பாடு நகைகள் போர்வை முதலிய இம்மாதிரியான புருஷர்களுக்கு இஷ்டமானவைகள் எவைகளோ, அவைகளில் வேண்டாமென்று சொல்லுகிறவர் யார். ஆனால் இவைகளை அனுபவிப்பதில் ஒவ்வொரு ஏற்பாடு இருக்கிறது அதிலும் விரோதம் ஏற்பட்டால் அவ்விஷயத்தில் யமன் சொல்லுவார். அதாவது பத்னி முதலிய சுகங்களை நன்றாய் அனுபவிக்கலாம் ஆனால் அவைகளில் ஒரு அளவு ஏற்பட்டிருக்கிறது. அதை மீறி நடந்தால் பாபம் மேலாகி எமனுடைய தண்டனைகளை பலவாறாய் அடையவேண்டுமென்பது கருத்து.

[illegible]
[illegible] ||
[illegible]
[illegible] ||

(33) ஒழிவினால் பிடிக்கப்பட்ட மனிதனுடைய மனம் சாந்தியையடையாவிட்டால் சிரமத்துடன் வேதங்களை படிப்பதில் ஆசையுள்ளவர்களாயிருக்கப்படுகின்றது அதனால் என்ன. கூர்மையான புத்தியானது கேளாததைக்கூட கேட்டதைப்போல் அடைகின்றது அதனால் பயன் என்ன சாஸ்திரங்களில் வாதஞ்செய்ய ஆரம்பிக்கும்போதே எதிரிகளை நிச்சயமாய் ஜெயித்துவிடுகிறான் அதனால் என்ன. அதாவது மனிதர்கள் வெகு வேதங்களையும் சாஸ்திரங்களையும் இன்னும் மற்றுமுள்ள உலகவிஷயங்களையும் நன்றாய் அறிந்திருந்தாலும் அவர்களுடைய மனம் எல்லா விஷயங்களிலிருந்து ஒழிவையடைந்து சாந்தியையடைந்ததாயிருக்கவேண்டும். இப்படியில்லாவிட்டால் மேற்கூறிய சாமர்த்தியங்கள் யாவும் பயன்படமாட்டாவென்பது கருத்து

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௩௪||

(34) எவன் மிகவும் முயற்சியுள்ள புத்தியையுடையவனைப் தர்மத்தை சேர்க்கவேண்டுமென்று விரும்புவனே அவனுக்கு கட்டுவாங்கர் முதலியவர்களுக்குப்போல் அரையாமம் வாழ் நாள் போறுதா என்ன. ஆனால் கெட்ட சாமர்த்தியத்தால் போக்கடிக்கபட்ட புத்தியையுடையவனும் அதிக சந்தேகமுள்ளவனும் எவனிருக்கின்றனே அவனுக்கு காகத்திற்குப்போல் வீணைவாழ் நாள்கள் எதற்காக நீண்டதாயாகின்றன. அதாவது தர்மத்தை செய்து தங்கள் நன்மையை தேடிக்கொள்ள விருப்பமுள்ளவர்களுக்கு அரையாமம் ஆயுளிருந்தாலும் அதற்குள் அவர்கள் தங்கள் நன்மையை தேடிக்கொள்ளுவார்கள். இவ்விதமாகவே கட்டுவாங்கர் என்னும் ஒருவர் செய்து கொண்டாரென்பதை சுலோகத்தில் சொல்லியிருப்பதால் அவருடைய சரித்திரம் பின்னால் கூறப்படும் இவ்விதம் தர்மத்தை செய்ய விருப்பமில்லாதவர்களுக்கு வெகு நாள் ஆயுளிருந்தாலும் பயன் படுவதில்லை. அது எவ்விதமென்றால் காகத்திற்கு வெகு காலம் வாழ்நாள்களிருக்கின்றன. ஆயினும் அவைகள் அக்காலத்தில் தங்கள் நன்மையை தேடுவதில்லை. இவ்விதமே சந்தேகமுள்ள மூடரும் ஆயுளெவ்வளவு இருந்தாலும் அதற்குள் தர்மத்தை செய்ய விரும்பாததால் அவர்களுக்கு வாழ்நாள் விருத்தியாகவேண்டுவதில்லை. கொஞ்சநேரத்தில் தனது நன்மைக்கு முயன்ற கட்டுவாங்கருடைய சரித்திரம் இங்கு சொல்லப்படுகின்றது. முன்காலத்தில் சூரியவம்சத்தில் கட்டுவாங்கரென்ற ஒரு அரசன் இருந்தார். அவ்வரசன் பூமியில் அரசாண்டு வரும்போது தேவலோகத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் சண்டையுண்டாயிற்று அப்போது இந்திரன் இவ்வரசனுக்கு சொல்லியனுப்பி இவரை வரவழைத்து யுத்தத்திற்கு உதவி செய்யும்படி கேட்டுக்கொண்டான். அப்படியே இவ்வரசன் அசுரர்களையெல்லாம் ஜெயித்து விட்டார். உடனே சந்தோஷமடைந்து தேவர்கள் வரன்களை கொடுக்கிறோம் என்று சொல்ல அந்த ராஜா முதலில் என் ஆயுள் எவ்வளவு என்று கேட்க தேவர்கள் ஒரு முகூர்த்தந்தான் என்றார்கள். முகூர்த்தமென்றால் $3\frac{3}{4}$ நாழிகை, உடனே

கட்டுவாங்கர் எனக்கு ஒன்றும் வேண்டாமென்று பூமியில் திரும்பி வந்து பயங்களிலிருந்து காப்பாற்றுகிறவராகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தியை அதற்குள் நன்றாய் பக்தியுடன் ஆராதித்து தனது நன்மையை தேடிக்கொண்டார் ஆகையால் தர்மத்தினால் நன்மையை தேடுகிறவர்களுக்கு கொஞ்ச காலமிருந்தாலும் போதுமென்பது கருத்து.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥௩௫॥

(35) பொருளில்லா விட்டால் பொருள்களாலேயே செய்யக் கூடிய தர்மத்தை விட்டு விட்டுவோம். உடலின் வருத்தங்களால் எவ்வளவு எவ்வளவு தர்மங்கள் செய்ய முடியாது. உடல் வருத்தமடைந்தால் அதனால் தர்மத்திற்கு என்ன குறைவு ஆகையால் பரமசிவனிடத்தில் கொஞ்சகாலமாவது, மனதையளித்து நமது மனதின் இஷ்டமானவைகளை தேடிக்கொள்ளுவோம் அதாவது சில தர்மங்களை பணத்தினாலேயே நடவேண்டும் பணமில்லாதவருக்கும் அநேக தர்மங்களுண்டு அவைகளை தேகத்தினால்செய்யவேண்டும். இவ்விதம் செய்வதினால் தர்மத்திற்கு யாதொரு குறைவும் கிடையாது ஆதலால் பணமில்லாதவர்கள் நமது தேகம் வருத்தமடைகிறதே யென்று கொஞ்சமாவது எண்ணாமல் ஸகலவருத்தங்களையும் போக்கியருள் செய்கிற பரசிவனை கொஞ்சகாலமாவது மனதில் நன்றாய் தியானஞ் செய்தால் நல்ல சுகத்தையடைந்து தங்கள் இஷ்டங்களை தேடிக்கொள்ளலாம் ஆகையால் பணமில்லாமலெவ்வித தர்மத்தையும் செய்ய முடியாதென்று வீணாய் இருக்கக்கூடாதென்பது கருத்து.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

(36) வேதாங்களாகிய வாக்கியங்களால் ஜீவர்கள் தெரியப்படுத்தப்பட்ட தகுந்தவர்களென்று தன்னாலேயே சொல்லப்பட்டதென்பதையும் இன்னும் ஜீவன்முக்தர்களாகவேயிருக்கிற முனிவர்களால் தர்மசாஸ்திரமும் செய்யும்படி செய்யப்பட்டதென்பதையும் தானே நன்றாய் ஊகித்துப்பார்க்கட்டும் பயங்கரமான இந்த ஸம்ஸா

ரம் போக்கடிக்கப்படுகின்றது. இப்போதும் மூடர்களாயிருந்தால் சிவனும் என்ன செய்வார். அதாவது பரமசிவன் ஜீவர்களுக்கு அறிவை யுண்டுபண்ணுவதற்காக வேதங்களால் தனது ரூபத்தை யும் அதை அறிந்து கொள்ளும் மாதிரி முதலியவைகளையும் நன்றாய் சொல்லியிருக்கிறார் அவைகளின் கருத்தையே பிராணிகளுக்கு நன்றாய் வெளிபடும்படியான தர்மசாஸ்திரங்களையும் செய்யும்படி மகாமுனிவர்களைக் கட்டளையிட்டுயிருப்பதால் அவர்களும் நல்ல நல்ல தர்மசாஸ்திரங்களையும் நமது நன்மைக்காக ஏற்படுத்திருக்கிறார்கள் இவைகளை யெல்லாம் நன்றாய் ஆராய்ந்து பார்த்து அதன்படி நாம் நடந்தால் ஜன்னமரண ரூபமான சம்சாரத்தை போக்கி விடலாம். இவ்விதமில்லாவிட்டால் அவர் இதற்குமேல் எவ்வித உபகாரத்தை தான் செய்யப்போகிறார். ஆகையால் நாம் வேதம் தர்மசாஸ்திரம் முதலியவைகளிற் சொன்னபடியே நடந்தால் இந்த பயங்கரமான சம்சாரத்தை தாண்டலாமென்பது கருத்து.

யேநைவாம்போ³நிதி³: பீதோ யேந ஸ்ருஷ்டா த்ரிதிவ்ருணா:
ஶஸ்த்ராண்யஸ்த்ராணி கபலிதாந்யேகயா யஷ்ட்யா ।
கஸ்தாத்³ருக்ஷோ ஹவா தே³வஜநோ தே³வஸமிதே³வ வப்ரே
காலஸ்ஸ ஜக்³தா⁴நிவ கவலயாஞ்சகார தாநப்யக்லிஷ்ட: ॥

(37) எவரால் சமுத்திரங்களும் குடிக்கப்பட்டனவோ எவரால் வேறு ஸ்வர்க்கமானது உண்டு பண்ணப்பட்டதோ. எவருடைய ஒரேகழியினால் ஆயுதங்களும் அஸ்திரங்களும் விழுங்கப்பட்டனவோ. அப்படிப்பட்ட எவன்தான் தேவக்கூட்டத்திலாவது பிராமணக்கூட்டத்திலாவதுசாமர்த்தியமுள்ளவனுயிருப்பான் காலமானது அவர்களையும் புழுக்களைப்போல் வருத்தமின்றி விழுங்கிவிட்டது. அதாவது சமுத்திரங்களை குடித்த அகஸ்தியர் வேறு ஸ்வர்க்கம் முதலியவைகளை உண்டு பண்ணின விச்வாமித்திரர், ஓர் மூங்கில் கழியினால் எல்லா அஸ்திரங்கள் முதலியவைகளையும் தடுத்துவிட்ட வசிஷ்டர் முதலிய பெரியோர்களும் காலகதியை அனுசரித்து விட்டார்கள் அவர்களுக்கு ஒப்பானவர் தேவர்களிலாவது பிராமணர்களிலாவது யார் இருக்கிறார்கள் ஒருவருமில்லையே. அப்படிப்பட்ட பெரியோர்களைக்கூட காலம் சாப்பிட்டதே. மற்றவர்களின் கதியென்ன, தேகம் அழிவையடையக்கூடியதுதானே, ஆகையால் இந்த தேகம் உள்ளபோதே நமது நன்மைக்கு முயலவேண்டுமென்று ஏற்படுகிறது. மேலும் இந்த சுலோகத்தில் மூன்று கதைகளிருக்-

கின்றன. (1) முற்காலத்தில் அகஸ்தியர் இல்வலனை துரத்தியபோது அவன் சமுத்திரத்தில் ஒளிந்துக்கொள்ள அப்போது சமுத்திரஜலமெல்லாம் குடித்துவிட்டார் என்னும் கதை புராணங்களில் கூறப்படுகின்றது (2) விச்வாமித்திரர் திரிசங்கு மகாராஜாவை சரீரத்துடன் சுவர்க்கத்திற்கு அனுப்பிய சமயத்தில் ஏதோ சில கோபங்களால் வேறு ஸ்வர்க்கம் முதலியவைகளை உண்டுபண்ணினர் என்னும் கதை விஸ்தாரமாய் ஸ்ரீமத் ராமாயணத்தில் சொல்லப்படுகிறது. (3) விச்வாமித்திரர் அரசனாயிருக்கும்போது வசிஷ்டருடைய ஆச்ரமத்திற்கு சென்று அங்குள்ள காமதேனுவை கேட்டபோது இருவருக்கும் கலகம் உண்டானகாலத்தில் வசிஷ்டர் தனது மூங்கில் கழியினால் பிரம்மாஸ்திரம் முதலியவைகளை தடுத்துவிட்டார் என்பதும் ஸ்ரீமத் ராமாயணத்திலேயே காணப்படும்.

[illegible]

[illegible] ॥௩௮॥

(38) சரீரத்தின் அழிவற்றதன்மையையாவது இந்திரியங்களின் சாமர்த்தியத்தையாவது உரவினரின் கூட்டத்தையாவது பணத்தையாவது கெட்டிக்காரத்தன்மையையாவது எதைபலமாக அடைந்து நாம் சும்மாவிருக்கிறோம். இது கடைசி மூச்சுக்காற்று அல்லது கடைசியானதற்கு முந்தினதா வென்பதை நன்றாய் யோசித்துப்பார்த்தால் பரமசிவனை மறந்து ஒருநிமிஷமாவது இருப்பதற்கு நாம் சக்தியுள்ளவர்களாயிருப்போமா அதாவது சரீரம் நிச்சயமில்லை யென்பதையும் இந்திரியங்களின் சாமர்த்தியம் உரவினரின் கூட்டம் பணம் தனது கெட்டிக்காரத்தனம் முதலியவைகளும் உபயோகப்படா வென்பதையும் நன்றாய் எண்ணி இவைகளில் ஒன்றையாவது தனக்கு பலமாக நினைக்கக்கூடாது ஆனால் இந்த சரீரம் நிச்சயமில்லாததால் ஒவ்வொரு மூச்சுக்காற்றையும் கடைசியானதாயும் அப்போதே இச்சரீரம்போய் விடுமோ வென்பதையும் நன்றாய் நினைத்து ஒவ்வொரு நிமிஷத்திலும் பரமசிவனை தியானித்துக்கொண்டிருந்தாலும் நாம் நல்ல கதியையடைலாமென்பது கருத்து.

[illegible]

[illegible]
[illegible] ॥௩௯॥

(39) வேதத்தை முதலில் அத்தியானஞ்செய்து பிறகு கிரகஸ்தாச்ரமத்தையடைந்து அதிக பணங்களை சம்பாதித்து யாகங்களால் ஈச்வரனை திருப்தியடையச்செய்து ஆயுளின் முடிவுகாலத்தில் ஸந்யாசம் வாங்கிக்கொள்ளவேண்டும் என்று எந்த மனுவோ அல்லது யாக்யவல்கியரோ சொல்லுகிறாரோ. அவர் அவ்வளவு காலம் வரையில் எனது ஆயுளுக்கு ஜாமீன்தாராயிருந்தால் அதெல்லாம் நம்பக்கூடியது தான். அதாவது பிரும்மசர்யாச்ரமத்தில் வேதாத்தியானஞ்செய்து பிறகு கிரகஸ்தாச்ரமத்தில் பணம் சம்பாதித்து யாகங்களையெல்லாம் செய்து கடைசி காலத்தில் வைராக்கியத்தால் ஸந்யாஸம் வாங்கிக்கொள்ளவேண்டுமென்று மகர்ஷிகள் வெகுவாய் சொல்லியிருந்தாலும் அவைகளை யெல்லாம் வரிசையாய் நடத்துவதற்கு நமக்கு போதுமான ஆயுளில்லாததால் அவர்களால் கூறப்பட்டவைகளில் ஏதோ சிலவற்றை செய்வதுடன் இடையிடையிலே ஈச்வரனை நன்றாய் தியானஞ்செய்து நமது நன்மையையடையவேண்டுமென்பது கருத்து.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

(40) அன்னம் தானியம் தனம் பூமி என்று மேலும் மேலும் மிகவும் ஏழைகளான மூடர்கள் எவ்விதம் இழக்கப்படுகின்றார்களோ இவ்விதமே நல்ல புத்தியையடைந்தவர்களும் பூமி ஸ்வர்க்கம் ஆகாயம் பிரும்மாவின் லோகமென்று மேல் மேலுள்ள நிலையற்ற ஸ்தானத்தால் மோகத்தையடையும்படி செய்யப்படுகிறார்கள் அதாவது அறிவற்ற ஏழைகள் முதலில் ஆகாரத்தையும் பிறகு தான்யம் முதலியவைகளையும் எவ்விதமாய் மேல் மேலும் அடையவேண்டுமென்று விரும்புகிறார்களோ அவ்விதமே நல்ல புத்தியுள்ளவர்கள் கூட அழிவையடைக்கூடிய பூமிசுவர்க்கம் பிரும்மலோகம் முதலியவைகளையே அதிகமாய் அடைய முயலுகிறார்களே தவிர அழிவற்ற பரமாநந்தத்தை அடைய விரும்புவதில்லையென்பது கருத்து.

[illegible]
[illegible] ।

[illegible]
[illegible]

(41) ஒரு தடவை பாபமானது அறிவில்லாமையால் அடையப்பட்டாலும் அஜாக்கிரதையினால் செய்யப்பட்டாலும் பிராயச்சித்தம் ஏற்படுகின்றது. அடிக்கடி மிகவும் ஜாக்கிரதையுள்ள ஜனங்களால் செய்யப்பட்டால் சமாதானம் என்ன. தயைக்கு சமுத்திரமாயும் முப்புரத்தையும் நாசம் செய்தவராயுமுள்ள பரமசிவன் நல்லவர்களிடத்தில் மிகவும் தயை செய்கிறாரென்பது சலம் தான் என்னைப்போன்ற கழிவினவனிடத்திலும் அவர் தயை செய்தால் தர்மமாகிய கரைகெட்டுப்போய்விடும். அதாவது பாபத்தை யுண்டுபண்ணக்கூடிய காரியம் நமக்கு தெரியாமலே ஒரு தடவை வந்து விட்டாலும் அல்லது நாம் நேரிலே ஒரு முறை செய்து விட்டாலும் அதை போக்கடிக்க பிராயச்சித்தம் உண்டு. இவ்விடத்தில் பிராயச்சித்தம் என்பது பாபத்தையுண்டுபண்ணக்கூடிய கெட்டகாரியங்களை யறியாமலோ அல்லது அறிந்தோ செய்து விட்டால் பிறகு அதை விலக்கிக்கொள்ளுவதற்கு செய்யப்படும் சடங்கிற்குப்பெயர். அடிக்கடி வெகு ஜாக்கிரதையோடே பாவத்தை செய்தால் பிராயச்சித்தமில்லாததால் சமாதானமே கிடையாது. தயைக்கு சமுத்திரமான பரமசிவனுடைய கிருபையாலேயே எவ்வளவு பாபமுள்ளவனாயிருந்தாலும் நல்ல கதியையடைந்து விடலாமென்றாலோ பரமசிவன் பெரியோர்களிடம் தயை செய்வது நியாயமே. நல்ல காரியங்களை யெல்லாம் விட்டு விட்டு பாவத்தை யுண்டுபண்ணத்தக்க காரியங்களையே செய்துகொண்டிருக்கிற நாமும் அவரது கிருபையை எதிர்பார்த்து அவரும் அவ்வாறே கிருபை செய்தால் தர்மத்தின் வரம்பு கெட்டுபோய் விடும் ஆகையால் நாம் எப்போதும் கெட்ட காரியத்தையே செய்துகொண்டிருந்தால் அதற்கு பிராயச்சித்தமும் கிடையாது பரமசிவனும் தயை செய்யமாட்டாரென்பது கருத்து.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(42) பரமசிவனுடைய கிருபையும் எவ்விதமாவது சம்பாதிக்கத்தக்கதென்பதும் முடியாத உபதேசம். (ஏனெனில்) அவ

ரது கோபத்தை முதலிற்போக்கிவிட்டே தயையுண்டு பண்ணத்தக்கது. வர்ணம் ஆச்ரமம் முதலியவைகளில் ஏற்படுத்தப்பட்ட ஒழுக்கங்களை தாண்டுவதாலுண்டான அந்த கோபம் இப்போதும் வரம்பு தவறி நடப்பவனுக்கு எப்படி போக்கடிக்கத்தகுந்தது. அதாவது எந்த காரியத்தை செய்தாலும் பரமசிவனுடைய கிருபையை சாம்பாதித்து விடுவோமென்றால் அதுவும் முடியாது ஏனென்றால் முதலில் அவருடைய கோபத்தை போக்கடிக்கவேண்டும் அதாவது நமது ஜாதி ஆச்ரமம் முதலியவைகளுக்கேற்ற ஒழுக்கங்களை நாம் மீறி நடப்பதால் அவர் கோபமுள்ளவராயிருக்கிறார். இப்பவும் நாம் அப்படியே நடந்தால் அவருடைய கோபத்தை போக்கடிக்க முடியாது ஆகையால் நமது ஜாதி முதலியவைகளிற் கூறியபடி வழுவாமல் நடந்தால் மாத்திரம் ஈச்வரன் தயை செய்வரே தவிர கொஞ்சமாவது தவறி நடந்தால் அவரது கோபத்தை போக்கடிக்க முடியாது. அதினால் நமக்கு நல்லகதி ஏற்படாதென்பது கருத்து. இவ்விடத்தில் (ஶம்பு) என்பதற்கு எவரிடமிருந்து சுகமுண்டாகிறதோ அவர் என்பது பொருள். வர்ணம் என்றால் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்ரரென்ற நான்குஜாதிக்கும் பெயர் ஆச்ரமம் என்பது பிரும்மசர்யம் கிருகஸ்தகம் வானப்பிரஸ்தம் ஸந்நியாஸம் என்ற நான்குக்கும் பெயர்.

இஷ்டாபூர்த்தநிமித்தவேதபடநைஃ க்ருச்ச்ரைஶ்ச சாந்த்ராயணைஃ
ஸ்வாமிந்நேத்யபி தவ சேதஃ காமமவஶீக்ருதம் |
மத்யே மத்யே யதி ந விஶேத் த்வாரதுல்யம் ஶ்ரத்தா
ஜ்ஞாநாஶ்ரத்தாத்வயமிதி தாஜ்ஞாதி ஸகலம் ப்ரயோஜநம் ||

(43) ஓ! சுவாமி! யாகங்கள் செய்வது குளம் முதலியவை வெட்டுவது ஆகிய இவைகளாலும் வேதங்களையத்தியானஞ்செய்வதாலும் கிருச்சிரம் சாந்திராயணம் முதலிய இன்னும் மற்றவைகளாலும் உம்முடைய மனதை மிகவும் வசப்படுத்திவிடுவோம். நமக்கு ஏற்படுத்தப்பட்ட காரியங்களுக்கு இடையிடையிலேயே பிரவிவிரோதத்தையுடைய ஞானம் சிரத்தை என்ற இவ்விரண்டும் தாப்பாள்போல் வந்து விழாவிட்டால் (நலம்) அதாவது மேற்கூறியவைகள் யாவும்நற்காரியங்களாகையால் ஈச்வரனது மனதை திருப்திசெய்யக்கூடும். ஆனால் அவைகளுக்கு ஞானம் சிரத்தை இவ்விரண்டும் அவசியம் வேண்டும். ஞானமாவது நல்ல அறிவு, சிரத்

தையாவது காரியங்களை சொன்னபடி வழுவாமல் சரியாய் நடத்த வேண்டுமென்ற ஆவல் இவ்விதம் நன்றாய் காரியங்களை செய்து ஈச்வரனுக்கு அளிப்பது மிகவும் அவசியம். இப்படியில்லாமல் எந்த நற்காரியத்தை செய்தாலும் பயன்படமாட்டாதென்பது கருத்து.

நிர்மர்யாதோऽப்யதிசபலதீரப்ரதிமாஜ்ஞாநராஶி:
 மாத்ருக்ஷோऽந்ய: க்வநு இதி பவதா நாத ம்ருக்யஸ்த்வயைவ |
தாத்ருக்ஷேऽபி ஸ்ப்ருஹயஸி யதி த்ராதுமுத்தாரயேஶ
 ஸ்வாமிந் விஶ்வேஶ்வர தவ க்ருபாஸ்தேऽஹமுத்தாரணீய: ||௪௪||

(44) வரம்பை தாண்டியவனும் மிகவும் நிலையற்ற மனத்தை யுடையவனும் ஈடற்ற அஞ்ஞானத்தின் கூட்டத்தையுடையவனுமிருக்கிற என்னைப்போன்ற வேறு யார் இவ்வுலகில் இருக்கிறானென்று உம்மாலேயே தேடத்தகுந்தது. ஓ ஸ்வாமி விச்வேச்வர இப்படிப்பட்டவனிருந்தாலும் எவ்விடத்திலேயாவது கிருபை செய்யவேண்டும் என்று உமக்கு ஆசையிருந்தால் அப்போது நான் ஜனனமரண ரூபமான ஸம்ஸாரத்தை தாண்டி விடுவேன். அதாவது மிகவும் ஞானமற்றவனுயிருந்தாலும் ஈச்வரனைக்குறித்து நல்ல பக்திசெய்தால் அவரது தயையால் சம்சாரக்கடலை தாண்டி விடலாமென்பது கருத்து. இவ்விடத்தில் (நிர்மர்யாதோ) என்பதற்கு சாஸ்திரங்களின் வரம்பை மீறியவனென்று பொருள். (விஶ்வேஶ்வர) என்பது எல்லா உலகங்களையும் படைத்தவர். ஸ்ரீகாசிக்ஷேத்திரத்திலிருக்கும் லிங்கத்திற்கும் இப்பெயர் வழங்குகிறது.

பஶ்சாத்தாபா: கமபி விபவே கிங்கரீபூய தைவே
 ஸேவாம் ஶம்போரிதி வ்ரதமிதம் வாஸநா க்ருஹ்யதாஸ்ம: |
ஆயு: கிம் வா கிமிவ கரணம் தேவ காயோ துரந்த:
 ஸ்வாமிந் துஸ்தரேऽஸ்மிந் மம நேதி நேதி ||௪௫||

(45) பச்சாத்தாபத்தை அடைந்தவர்களாயிருக்கிற நாம் தெய்வத்திற்கு வேலைக்காரர்களாகி பரமசிவனுடைய சேவையை செய்வோமென்ற விருதத்தையாவது மிகவும் சிரமப்பட்டு மனதில் தீர்மானப்படுத்திக்கொள்ளுவோம். நமக்கு ஆயுள்தான் ஏது, சாதனந்தான் ஏது; ஓ ஸ்வாமி சரீரமனது தாண்டமுடியாத இந்த வருத்தத்தில் எனக்கு நேரேகதி நேரேகதி. அதாவது, ஆதியில் நாம்

அறியாமல் தவறுதலான காரியங்களை செய்துகொண்டு வருகிறோம் பிறகு தெரிந்துகொண்டு இவ்விதம் செய்து விட்டோமேயென்று வருத்தமடைந்தால் அதற்கு (வ்யூடாக்ஷா) என்று பெயர் இவ்விதம் வருத்தமடைந்து சாஸ்திரங்களுக்கு கட்டுப்பட்டு எப்போதும் பரமசிவனை பூஜிக்கிறதென்ற விரதத்தை கைகொள்ளுவோமென்றால் அப்படி பூஜிப்பதற்கு போதுமான வயதும் சாதனங்களுமில்லாததால் மிகவும் வருத்தமாயிருப்பதால் என்னை இப்போதே நீர் காப்பாற்றவேண்டுமென்று கடவுளை பிரார்த்திக்கிறார் என்பது கருத்து. (ஶிவஶிவ) என்பது ஆதரவால் இரண்டுதடவை சொல்லப்பட்டது. இங்கு (ம்ருடானீரமண) என்பதற்கு பார்வதியினிடம் எவ்வித அன்பு இருக்கின்றதோ அப்படிப்பட்ட அன்புடன் என்னை காப்பாற்றவேண்டுமென்பது பொருள்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௪௬||

(46) ஓ! பரமசிவனே! உம்முடைய பட்டணத்தில் மூன்று மலங்களாலும் நன்றாய் விடப்பட்டவர்களாயும், வேறுபிரகாரத்தை விரும்பாமல் தனது பிரகாசத்தாலேயே விளங்குகிற ஒளியோடு கூடிய உருவத்தையுடையவர்களாயும், உம்மை நன்றாய் தியானம் பண்ணுவதிலே பிரவேசிக்கிற மனதையுடையவர்களாயுமுள்ள எந்த (நித்திய) சூரிகள் இருக்கிறார்களோ, அவர்களுக்கு ஒருக்காலும் அறியப்படாதவனும் விவேகமற்ற பசுவாயுமிருக்கிற என்னை காட்டுவதற்கு பிரபஞ்சத்திற் கெட்டாமலிருக்கிற நகரத்தைக்குறித்து அழைத்துக்கொண்டு போகின்றீர். அதாவது ஓ சிவனே அஞ்ஞானத்தினால் சூழப்பட்டவனும் உம்முடைய தியானம் பண்ணுவதில் மனதைசிறிதுகூட உபயோகிக்காதவனாயிருக்கிற நான் உம்முடைய உலகத்திற்கு வரக்கூடிய நற்காரியங்களை கொஞ்சமாவது செய்யாததால் உமது நகரத்திலுள்ள மூன்று மலங்களால் நன்றாய் விடப்பட்ட நித்திய சூரிகளுக்கு என்னை வேடிக்கையாய் காட்டுவதற்காயது உம்முடைய உலகத்திற்கு அழைத்துக்கொண்டுபோனால் அதிகமான அஞ்ஞானத்தையுடைய நான் நல்ல கதியையடைந்து விடுவே

னேயென்று பரமசிவனே பிரார்த்திக்கிறார் என்பது கருத்து. இங்கு மூன்று மலம் என்பது ஆணவம், மாயிகம், கார்மணம் என்று ஆகமசித்தாந்தம், வாசிகம் காயிகம், மானஸிகம் என்றுஞ்சிலர்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(47) பிராமணசிரேஷ்டர்களின் வம்சத்தில் அதிர்ஷ்டத்தால் பிறப்பு அடையப்பட்டது அதிலும் ஆசாரியர்களுடைய தயவினால் தர்மம் அதர்மம் இவைகளின் மரியாதையானது அதிர்ஷ்டத்தால் அறியப்பட்டது. இந்த பிறப்பிலும் எனக்கு கடவுள் உண்டென்ற நம்பிக்கை ஏற்படாவிட்டால் நரகமாகிய வீட்டிலிருந்து எல்லாவற்றிற்கும் மோட்சம் வந்தாலும் எனக்கு தாண்டுதல் கிடைக்கக்கூடியதா. அதாவது வேறு பிறவிகளில் அநேகம் நன்மை செய்திருப்பதால் மிகவும் சிலாக்கியமான பிராமண குலத்திற் பிறந்து அநேகம் ஆசார்யர்களுக்கு சேவைசெய்து அவர்களின் தயவினால் தர்மம் இன்னதென்றும் அதர்மம் இன்னதென்றும் நன்றாய் தெரிந்துகொண்டிருந்தாலும் அவசியம் கடவுள் உண்டென்று நல்ல நம்பிக்கையுள்ளவனாயிருக்கவேண்டும், இந்தநல்லதான பிறப்பிலும் அவ்வித நம்பிக்கையற்றவனாயிருந்தால் நரகத்திலிருந்து எல்லாம் வெளிப்பட்டாலும் நமக்கு ஒருபோதும் வெளிப்படவே முடியாது நல்ல கதியும் ஏற்படாது. ஆகையால் எல்லாம் ஏற்பட்டதுடன் ஈச்வரபக்தியும் இருந்தால் மிகவும் நலம் என்பது கருத்து.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௪௮

(48) சரீரம் க்ஷேமமுள்ளதாயிருக்கும் போதே இந்திரியங்கள் பலமுள்ளவைகளாயிருக்கும்போதே வீடு தனத்தால் நிறைந்திருக்கும்போதே வயதும் யௌவனமாயிருக்கும்போதே வெகு சிரமப்பட்டு துக்கம் உண்டாகாமலிருக்கும்போதே எந்த மனித

னுக்கு சுபாவமாகவே மனதானது தலைகீழாய் பூக்கிற நாயுருவியின் பூக்காம்புமாதிரியாய் தலைகீழாய் முகத்தையுடையதாய் ஆகின்றதோ அவனைக்காட்டிலும் சாமர்த்தன் வேறு யாரிருக்கின்றான். அதாவது மனிதர்கள் நற்காரியங்களை பிறகு செய்துகொள்ளுவோம் என்றிருந்தால் கிழத்தனமும் ஏழ்மைத்தனமும் வந்து விடுகிறபடியினால் தேகத்தின் பலமும் தனமும் இந்திரியங்களின் சாமர்த்தியமும் குறைவதற்கு முந்தியே ஈச்வர தியானம் முதலிய நற்காரியங்களை செய்து கொண்டால் நன்மையைப்படைலாமென்பது கருத்து.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥௪௯॥

(49) நான் சந்திரனுடைய ஸ்தானத்தையும் இந்திரனுடைய அதிகாரத்தையும் பிரும்மாவின் உலகமேன்மையும் பிரார்த்தித்து கேட்கவில்லை. மற்ற உலகங்களின் விஷயத்தில் சொல்லவேண்டுவதென்ன வேறொருவனுடைய ஐசுவரியத்தை வேறு யாராவது விரும்பட்டும் அவனுக்கு எந்த உலகமாவது கிடைக்கட்டும் ஹே பரமசிவனே எனக்கு அதிகமான சுகத்தை கொடுக்கக்கூடிய என்னுடைய ஆனந்தத்தையே நீர் கொடுக்கவேண்டும் அதாவது பிரும்மாவின் ஸ்தானம் முதலிய எல்லாவைகளும் நிலையற்றதாதலால் இவைகள் எனக்கு வேண்டுவதேயில்லை. யாராவது அடையட்டும் ஆனால் எனக்கு அழிவற்ற சுகத்தை கொடுக்கக்கூடிய பரமாத்மாநந்தமே வேண்டியது. அதையே பரமசிவன் தயைசெய்து எனக்கு கொடுக்கவேண்டுமென்பது கருத்து.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥௫௦॥

(50) இப்போது கவியானவர் தன் வம்சத்தில் ஆதிபுருஷர் முதல் எல்லோரும் சிவபக்தி செய்து அதினாலேயே நற்கதியையடைந்திருப்பதால் தானும் அவ்விதமேயடையவேண்டுமென்று பரமசிவனை பிரார்த்திக்கிறார்.

சந்திரனை சிரத்திலுடைய ஓ! பரமசிவனே! கர்ப்பம் முதல் குலத்தின் முதல்வராயிருப்பவர் வரையிலும் பிரும்மா வரையிலுமாவது உன்னை எங்களுடைய பாதகமலங்களில் சரணாகதி செய்தவர்களாய் அறிகின்றீர்.

ஓ! சுவாமி! சரணாகதி செய்தவர்களிடத்தில் மாயை நெருங்குவதில்லை என்பதையும் நீர் சொல்லுகிறீர். ஆகையால் எது செய்யத் தகுந்ததோ அவ்விஷயத்தில் தேவராகிய நீர் தான் நடத்தவேண்டியது. அதாவது நான் முதல் எங்கள் வம்சத்திலேவருகிய பரத்துவாசர் வரையிலும் அல்லது பிரும்மா வரையிலுமுள்ள நாங்களனைவரும் சிவபக்தி செய்து அவரது பாதகமலங்களை சரணமடைந்திருப்பதால் இவ்விதம் தன்னை நம்பியவர்களுக்கு மாயையென்பது சமீபத்தில் வராதென்று அவரே அடிக்கடி சொல்லுவதால் எங்கள் விஷயத்தில் பரமசிவனுக்கு என்ன செய்யவேண்டுமென்று தோன்றுகிறதோ அதை செய்யட்டும் எங்களுக்கும் அவரைத்தவிர வேறு தெய்வம் கிடையாதென்பது கருத்து.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ருக॥

[illegible]
[illegible]
[illegible]

****

(51) எல்லா உலகங்களுக்கும் தெற்கிலுள்ள எந்த எமன் சிட்சையை செய்துகொண்டிருக்கிறாரோ. பயத்தையுண்டு பண்ணத்தகுந்த உருவத்தையுடைய இவருடைய பெயரைக்கூட உச்சரிக்கமாட்டோம் என்று வேதவாக்கியங்களுக்கெல்லாம் மேலான எந்த கிருதார்த்தர் இருக்கின்றாரோ அவரையடைந்து விட்டோம். எது வேண்டுமோ அது ஆகட்டும் மறுபடி அவருடைய முகத்தை பார்க்கமாட்டோம் அதாவது தெற்குதிக்கிலிருந்துகொண்டு எல்லா

ரையும் பி[illegible] மிகுந்த பயங்கரமான சரீரத்தையுடைய எமனுடைய பயமானது [illegible] லோகத்துக்கும் பயமாயிருப்பதால் வேத வாக்கியங்களால் மிகவும் புகழப்பட்ட ஸ்ரீபரமசிவனையே அடைந்து விட்டேன். எப்படியாவது சி[illegible]றபடி" அந்த எமனுடைய முகத்தைப் பார்க்க விரும்பவில்லை. ஆகையால் மிகவும் கிருபையுள்ள ஸ்ரீபரமசிவனே நம்மை காப்பாற்றவேண்டுமென்பது கருத்து.

இவ்விதம்,
ஸ்ரீநிலகண்டதிக்ஷிதவர்களியற்றிய,
ஸத்கிரந்தங்களிலொன்றாகிய,
சாந்திவிலாஸத்தின்,
தமிழ் மொழி பெயர்ப்பு,
முற்றிற்று.

****